639

786

# தேசாபிமானிகளின்

# சிறப்பு.

இஃது

தஞ்சாவூர் ஜில்லா ஐயம்பேட்டை மதரசா

ஹஸனாத்துல் ஜாசியாத்தின் சதர்முதர்ரிஸ்

மௌலானா மௌல்வி காதிர் முஹியித்தீன்

சாயபவர்களின் சிஷ்யனான

பொதுஜன ஊழியன்

அப்துர்ரஹ்மானால்

இயற்றப்பட்டு

நாமக்கல்

யூனியன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1923. [அணா 2.

காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

0-,1x
N23
179387

நாமக்கல்

## ஸ்ரீமான் வெ. இராமலிங்கம் பிள்ளை கொடுத்த

## சாற்றுக்கவி.

---

பாட்டெனப் பாடிச்சொன்னால் படிப்பெனப் படிக்காதாரும்
கேட்டேங் கரைந்துநெஞ்சிற் கிளர்ந்தெழும் ஊக்கம்கொள்வார்
நாட்டினிற் குறைப்பதொன்றே நாட்டமாம் தேசபக்தர்
காட்டிய பெருமைபேசக் கனிந்திடும் பக்தியென்னும்.

பள்ளுபறை முதலான பாமரராம் ஜனங்களுக்குள் பக்திவந்து
பாரதத்தாய் விடுதலைக்கு முன்னின்றுப் பாடுபடப் பரிந்தாலன்றி
வெள்ளையுடை விருதாட வீதிவலம் சுற்றிவந்து வீணேபேசி
வேலையின்றிக் கூலிகொள்ளும் பட்டணத்தார் விரும்பினதினாலே [மட்டும்,
கள்ளமற்ற சுதந்தரந்தான் கடினமது கிடைப்பதெனும் கருத்திற்கேற்ப
கல்லாத எளியவர்க்கும் கனிவாகும் நடையான கவிகள்பாடி
அள்ளியெழும் அன்பானல் "தேசாபிமானிகளின் சிறப்பு" சொன்னான்
அப்துர்ரஹமானென்னும் அன்பன்ஜனஊழியத்தில்ஆசைமிக்கோன்.

# ஜஸீரத்துல் அரபும் தமிழ்நாட்டு முஸ்லீம்களும்.

சகோதரர்களே!

நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் எந்தத் தலங்களை விட்டும் எஹூதி நஸ்ஸாராக்களாகிய நமது மார்க்கவிரோதிகளை அப்புறப்படுத்தும்படி நமக்கு ஆக்ஞையிட்டிருக்கின்றார்களோ அவைகளுள் அநேக இடங்கள் தற்போது நஸ்ஸாராக்களின் ஆட்சிக்குள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்றன. ஆதலால் அந்நாடுகளை மீண்டும் நாம் கைப்பற்றும்பொருட்டு அவ்வன்னியர்களுடன் (ஜிஹாத்) என்னும் மதப்போர் புரியவேண்டியது நமதுகடமையாகும். மார்க்கசீர்திருத்தத்தின்பொருட்டு உயிர்த்தியாகம் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அப்பொழுது எனது உயிரையும் பொருட்படுத்தாது செலவுசெய்து மார்க்கத்திற்குற்ற ஹானியை அகற்றுவேனென்ற எண்ணம் யாரில் பலமாக இருக்கிறதோ அவர்கள்தான் உண்மையான முஸ்லீம்களென்பது நமது மார்க்க (அகீதா) சித்தாந்தம். ஆனால் இந்திய முஸ்லீம்களாகிய நாம் உயிர்த்தியாகம் செய்வதற்குரிய சக்தியில்லாதவர்களாயிருப்பதால் தற்போது நமது பிரதிநிதிகளாக அங்கோராவில் உயிர்த்தியாகஞ்செய்து கொண்டிருக்கும் நம்சகோதரர்களுக்கு நம்மாலியன்றவரை பொருளுதவி செய்யவேண்டியது நம்மீது (பர்லு) கடமை. ஆதலால் முஸ்லீம் சகோதரர்களே, நீங்கள் மார்க்கத்திற்காக உயிரையுங்கொடுக்கச் சித்தமாக இருப்பது உண்மையானால் தற்போது ஒவ்வொருவரும் உங்களாலியன்றவளவு பொருளுதவி செய்து சுவர்க்கத்தைக்கிரயஞ்செய்து கொள்ள முன்வாருங்கள். இது தனவந்தர்களை மட்டிலும் சேர்ந்த விஷயமென்று நினைக்காது, "பலதுளி பெருவெள்ள" மென்பதை நினையுங்கள், ஏனெனில் நம் நாட்டில் காலணாவுங்கொடுக்க சக்தியற்றவர்கள் யாருமில்லை. ஆனால் காலணாகொடுக்குஞ் சக்தியையுடைய ஏழைகளும் "இந்தக் காலணாவையா கொடுக்கிறது"? என்று நினைக்காமல் இந்தக் காலணாவானது நமது மார்க்கவிரோதிகளால் துன்புறுத்தப்பட்டு தற்போது ஸ்மர்னாவில் குடியிருக்க வீடின்றியும், உடுக்க உடையின்றியும், உண்ண உணவின்றியும் மிகப்பாதவித்துக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான நமது சகோதரர்களின் குழந்தைகளுள் ஒரு குழந்தைக்கு ஒருவேளை (நாஷ்டா) சிற்றுண்டிக்குதவுமென்று மதித்து, அந்தக்காலணாவையும் தங்கள் தங்கள் ஊர்களிலுள்ள கிலாபத் கமிட்டியார்களிடம் கொடுக்கும்படியும், ஒவ்வொருவரும் வருஷம் ஒன்றுக்கு நாலணாகொடுத்து கிலாபத் மெம்பர்களென்ற (முஜாஹிதீன்) மதத்தொண்டர்களாகும்படிக்கும், காங்கிரஸ் மெம்பர்களென்ற தேசத்தொண்டர்களாகும்படிக்கும், கேட்டுக்கொள்ளுகிறேன். சர்வசக்தியுமுள்ள ஆண்டவன் மேற்கூறியவாறு நாம் நடந்து நற்பதவிக்காளாகுமாறு நமக்கு நல்லருள் புரிவானாக. ஆமீன்.

பொதுஜன ஊழியன்

அப்துர் ரஹ்மான்.

# தேசாபிமானிகளின் சிறப்பு.

இஸ்லாத்தின் கோடியாகிய

## காஜி. முஸ்தபா கமால் பாஷா அவர்கள் பேரில்

(பொன்னுலவு சென்னிகுள—என்ற காவடிச்சிந்து மெட்டு).

முஸ்தபாகமாலைப்போலே சுத்தவீரன் நானெனவே
முன்வரச் சமர்த்தெவர்க்கு முண்டுமோ எந்த
மன்னர்கள் சக்தியும் அங்கு அண்டுமோ பெரும்
மோசக்கார கிரேக்கர்சேனையை
நாசமாக்கிய பாக்கியவானும்
முகமலர்ச்சியோடு என்றும்வாழ்ந்திட, நாம்
அகமகிழ்ந்திறை யிடங்கையேந்துவோம் (முஸ்)

மாட்சிமைசேர் கலீபாவின் ஆட்சியைத்துண்டுபடுத்தி
மாற்றவிரோதியர் எங்கள் நாட்டையே, வெகு
ஊக்கமதாகவே பங்குபோட்டதால், அதை
வாங்குமுன் உருவியவாளும் எப்
பாங்கினுலும் உரைபுகாதென
மன்னர்கள்நடுங்கிட அபாரமாய், அன்று
சொன்னபடியே நடந்தார்வீரமாய் (முஸ்)

உலகில்சமாதானம் நன்றாய்நிலவிவிட வேண்டுமென்றால்
உத்தமர் முஸ்தபாகமால் நேசந்தான் அதற்
கோத்தவழியென்று நேசதேசந்தான், மிக
ஓலமிடுவதினாலே பாரிலிக்
காலமதிலிவர் போலேயிலையென
ஒப்புக்கொண்டுவிட்டனர் எல்லோருமே தொண்டன்
அப்துர் ரஹ்மானின் கவிபாருமே (முஸ்)

## ஷம்ஸுல்உலமா மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள் பேரில்

(ராஜவிஸ்வாசலாலா—என்றமெட்டு).

பல்லவி.

அபுல்கலாமா சாதுக்காருநிகர் பாரில்
யாருநிகர் வேறுயாருநிகர்

அநுபல்லவி.

ஆதியின்வேதம் ஓதியநீதர் (அபுல்)

தொகையறா.

ஆதாரமற்றமொழி பேசாதுமார்க்கத்தை
ஆராய்ச்சி செய்தவல்லோர்
அறிவில்சிறந்த உலமாக்களும் புகழ்கின்ற
ஆச்சர்ய கல்வியுள்ளோர்

சரணத்தொடர்.

அன்புநிரம்பித்ததும்பிட அன்று
வம்பர்செய்துன்பமும் இன்பமதென்று.

பல்லவியெடுப்பு.

ஆகின தாலேசிறை யேகினரோநம்துரை
அபுல்கலாமா சாதுக்காருநிகர். (அபுல்)

தொகையறா.

இணையிலான்ஆக்ஞையை அல்ஹிலாலென்ற
பத்திரிகையின் மூல்யமாக
யார்க்குமறிவித்தவர்க் கிறையவனிடம்கையை
வந்துவோம் வயதுநீழ்க

சரணத்தொடர்.

இந்தியர்நொந்து சிதைந்ததுகண்டார்
உந்தியுவந்து சுதந்தரமென்றார்

பல்லவியெடுப்பு.

இப்புவியோர்கள்மகிழ் அப்துர்ரஹ்மான்புகழ்
அபுல்கலாமா சாதுக்காருநிகர். (அபுல்)

## மகாத்மா காந்தியவர்கள்பேரில்.

(ஜாதிமாதமுதல்தேதி—என்ற மெட்டு).

கண்ணிகள்.

காந்திமகான்சொல்லை எர்ந்திடி லுலகில்
சாந்திஉண்டாகிடுமே, தரித்திரங்கள்
தேய்ந்து துண்டாகிடுமே (கா)

இந்தியதேசத்தைச் சார்ந்திருக்குந்துயர்
தீய்ந்திடவேண்டுமென்றால், இந்துமுஸ்லீம்
சேர்ந்திடவேண்டுமென்றார் (கா)

சத்தியம் இல்லாருடன் ஒத்துழைப்பைவிட்டுஞ்
சத்தியஞ்செய்யச்சொன்னார், கதர்த்துணியை
நித்தியம் நெய்யச்சொன்னார் (கா)

ரத்தவெறிகொண்ட பித்தர்களுக்கிவர்
மெத்தவும் ஆகாதவர், அஹிம்ஸையது
சித்தம்விட்டேகாதவர் (கா)

என்னேரமுந்தேச முன்னேற்றத்தின்மீது
எண்ணமதிமிகுந்தோர், அப்துர்ரஹ்மான்
சொன்னகவிக்குகந்தோர் (கா)

## மௌலானா ஷவுக்கத்தலியவர்கள்பேரில்.

(அடுக்குமல்லிகை தொடுத்தமெத்தையிலே—என்றமெட்டு).

கண்ணிகள்.

ஷவுக்கத்தலியைப் போலிந்நாட்டிலே
அஞ்சாநெஞ்சமுள்ள
தைரியரொருவரையுங் கேட்டிலேன், மத
தருமநெறியின் பெருமையைவெகு
பொறுமையுடனே அருமையாய்ப்பகர் (ஷவு)

மதயுத்தஞ்செயும் போர்முனையிற்சென்று
பெரும்போர்புரிகையில்
மாய்ப்பதுவும் நாம்மாய்வதுவும் ஒன்று, என்ற
மார்க்கமுறையைத் தீர்க்கஅறிந்தெல்
லோர்க்குமேவெகு ஊக்கமாய்ச்சொலும் (ஷவு)

தாயைத்தெருவில்பார்த்தால் பிள்ளையை
வீடுபோய்ப்பார்ப்ப
தவசியமொருபோதுமில்லையே, யென்று
ஜகமெலாஞ்சொல்லும் உவமானமது
மிகவுஞ்சரியென் றெவர்க்குங்காட்டிய (ஷவு)

அற்புதவைராக்ய சற்குணர்
ஜனசமூகஊழியன்
அப்துர்ரஹ்மான் புகழும்நற்குணர், சொல
அரியவிஷயங் தெரிபவர்மகா
பெரியவர்புகழ்க் குரியவரெனும் (ஷவு)

## மௌலானா முஹம்மதலியவர்கள் பேரில்.

(சரசக்காரமாமா—என்ற மெட்டு).

**பல்லவி.**

முகம்மதலியின்வீரம்
முடியாது சொல்லஅபாரம்

**அனுபல்லவி.**

நெடுமுடியரசர்கள் கிடுகிடெனவே
நடுநடுங்கிடும் படிபகன்றிடும் (முஹ)

**தொஹையரா.**

முன்னொருநாள் வானரத்திற்கறிவான
செய்திசொன்ன தூக்கணாந்தான்
றன்னையுமே மானபங்கம் செய்ததுபோ
லிந்த மகாதவசிரேஷ்டர்

நன்னயஞ்சேர்ஞான உபதேசமதை
நீதிமன்றம் நாடிச்சென்று
சொன்னதற்குப்பரிகாரம் இருவருஷகடுங்காவல்
சிக்ஷையென்ற

(பல்லவியெடுப்பு).

துஷ்டச்செயலுமழிய, இந்தக்
கஷ்டம்நமை விட்டொழிய, வெகு
துணிவுடன் சுதாணியும் அடிமைப்
பிணியதுநமைப் பணியுமென்றிடும் (முஹ)

தொஹையரா

எவரேனும் என்மதத்திற்கோரணுவு
இடையூறு இழைத்தாலந்தத்
தவருணசெய்கைதனை ஒருநிமிஷமேனும்
யான்சகித்திடாது
பவரானபோர்புரிந்து மார்க்கசுதந்திரமதனைப்
பறிப்பேன் அன்றேல்
அவராலேயான் மடிவேனெனவுரைத்த
மார்க்கவைராக்யமுள்ள.

(பல்லவியெடுப்பு.)

அற்புதகுண யோக்யர், அவர்
இப்புவிக்கொரு பாக்யர் மத
ஆவலாலிறை எவற்கிசைந்து
பாவமகற்றிக் காவலடைந்த (முஹ)

தொஹையரா.

மார்க்கவிரோதியரான அரசர்களின்ராணுவத்திற்
சேர்ந்தால்மோட்சம்
பார்க்கமுடியாதுபெரு நரகடைவீர்-ஆனதால்
பட்டாளத்தில்
சேர்க்க அவர்வந்தாலும் இணங்காதீ
ரெனச் சபையிலுள்ளோரெல்லாம்
ஏற்கவொரு உபந்நியாசஞ்செய்ததுவே
குற்றமென இம்மகானுக்

பல்லவியெடுப்பு.

திருவருஷமும் விதித்தார் அது
பெருந்தவறெனமதித்தார், அதை
எற்று அப்துர்ரஹ்மான் புகழ்ந்திக்கவி
சாற்றும்படி சிரைதக்கியசற்குண (முக)

திருச்சி மேளலாஞ மேளல்வி.

சையிதுமுர்த்தலாஸாஹிபு அவர்கள்பேரில்.

(செந்தாழமபூவின்தேன்கமழும் —என்றமெட்டு).

கண்ணிகள்.

சையிதுமுர்த்தலாவென்ற நீருந்மதப்போரரே
வையகமீது செய்யுபதேசம்
வம்பர்கட்குப் பெருந்துன்பமதாய்மத
அன்பர்கட்குவெகு இன்பமதாகிடும் (சை)

அஞ்சாநெஞ்சகர் மோட்சவழியின் ஆவ்லர்மதகாவலர்
வஞ்சகரான மன்னர்யாரேனும்
மதவிஷயத்தில் இடைஞ்சல் செய்திடில்
உதவிமறுத்தல் கடமைஎன்றிடும் (சை)

சுயநலங்கருதாதவர் மதத்துரோகிகளுக்காகாதவர்
வயதெலாம்வேத வாக்யமேஓதும்
மன்னரிப்புவியில் வாழ்ந்திடஇப்பதம்
சொன்னஅப்துர்ரஹ்மான்புகழ் அற்புத (சை)

## கேளமி ரிப்போர்ட்டின் பத்திராதிபர்
## மௌலானு அப்துல்மஜீதுஷரர் அவர்கள்பேரில்.

(வருந்துவதழகோமன்னு—என்றமெட்டு.)

கண்ணிகள்.

மருத்துவஞ்சேர் அப்துல்மஜீதுஷரரின் தன்மை
மற்றவரெவ்விதமறிவார்
அகத்தினையடக்கி அரும்பசியொடுக்கி
அல்லும்பகலும் இறையவனையேவணங்கும் (மரு)

மதவிரோதியர்கட்கு உதவிபுறிவதுநம்
மார்க்கவிரோதம் என்றனர்
அதுகுறையென்று அரஸ்டுசெய்தன்று
அநியாயமாகச் சிறைக்கனுப்பிடச்சென்ற (மரு)

சொற்பத்தொகையினர்செய் துன்பம்
தொலைக்கவன்றோ சொல்லொணுகஷ்டமடைந்தார்
அற்புதமான அறிவுளஞானர்
அப்துர்ரஹ்மான்கவிக் கருகருமான (மரு)

0-1/2
1522
179387

## ஐயம்பேட்டை மௌலானு மௌல்வி
## N. அப்துல் வஹ்ஹாபுஸாஹிபு அவர்கள்பேரில்.

(பாலாபிஷேகப் பழனிமலை—என்றமெட்டு.)

பல்லவி.

மார்க்காபிமானி என். அப்துல்வஹ்ஹாபெனும்
மன்னரின்வீரத்தை யென்னசொல்வேன்

அநுபல்லவி.

பார்க்குள்யாரும்இறை ஆக்ஞைக்கிணங்கல்
பர்லெனயெங்கும் பிரசங்கம்புரிந்த (மார்)

தொகையறா.

அஞ்சாதநெஞ்சமும் தேசாபிமானமும்
அமைந்த சுயராஜ்ஜியநோக்கர்
அவனிமேல்யாவரும் சாத்வீகப்போருக்கு
ஆளாகச்செய்யும் வாக்கர்.

சரணத்தொடர்.

அடிமைகளாயினி வாழவுமாட்டோம்.
அடக்குமுறையைக்கண்டு தாழவுமாட்டோம்
ஆகையினாலே விவேகத்துடன்சுய
ஆட்சியை எங்கட்களித்திடுவீரென்ற (மார்)

தொகையறா.

மஜ்லிஸுல் உலமாவெனும் பெரியசபையிலே மார்க்கப்ரசாரரென்ற
மகுடம்புனைந்து பலவிடமும்பிரசங்கங்கள் மாறுதுசெய்துநன்றாய்

சரணத்தொடர்.

மடைமையதாகிய ராஜவிஸ்வாசம்
கடமையிலையென்றடைந் தார்சிறைவாசம்
மாணவன் அப்துர்ரஹ்மானிப்பாட்டைச்சொன்
னானே பிரியமதாய் ஐயம் பேட்டைவாழ் (மார்க்கா)

## கதரின் மகிமை.

நோண்டிச்சிந்து.

கதரின்மகிமைமுழுதும் எழுதிடக்
காகிதம்போதாததினால் சுருக்கிக்கொண்டேன்
நிதமும்பருத்தியெடுத்து விரையகற்றி
நேர்த்தியுடன் ராட்டினத்தால் நூலைநூற்று
சுத்தமுள்ள கைத்தறியினால் ஆடைகள்நெய்து
சுதந்தர எண்ணத்துடன் தரித்துக்கொண்டால்
கீர்த்தனருளாலேமது தரித்திரங்கள்
காணாமல் மேல்நாடு ஏகிவிடுமே

பஞ்சாபில் கொடுமைசெய்த டயரெனும்
பாவிக்கு முத்துப்பதித்த வீரவாளை
அஞ்சாதுபரிசளித்த சண்டாளர்
அனுப்பும்அசுத்தத்துணி வாங்கலாமோ
வெளுக்கக்கிடைத்ததுணியை வண்ணானுடுத்தி
வீதியிலுல்லாசமாகக் கையைவீசி
தளுக்காயுலாவுவதுபோல் அன்னியதேச
ஜவுளி தினுசணிதல்சரிதானே
சத்தியத்தைநிலை நிறுத்தும் ஹிருதயத்தில்
சாத்வீகத்தன்மை குடிகொள்ளச்செய்திடும்
புத்தியை அதிகப்படுத்தும் உலகனைத்தும்
புகழுங்கதருடையைப் புனைந்துகொண்டால்
இப்புவியிலுள்ளபெரியோர் அனைவரும்
இன்பமுடன் கட்டுவதுகதர்தானே
அப்துர்ரஹ்மான் தினமும் பிரியமுடன்
அணிந்திடுவதுமிந்தக் கதர்தானே

சைபுல் இஸ்லாம் பத்திராதிபர் மௌலானா மௌல்வீ
அஹமது சையீதுஸாஹிபு அவர்கள்பேரில்.

(நம்பிரானினைந்தென்னாளும்—என்ற மெட்டு).

பல்லவி.

அஹமதுசயீதெனும்பேரா
நல்விவேகரே (அஹ)

அநுபல்லவி.

ஜெகமதிலேமார்க்கத்தொண்டு
செய்வதிலே ஊக்கமுண்டு
அஹமதிலிறைவன் பயமுள்ளோர்
நல்லோர் வல்லோர் (அஹ)

தொஹையரா.

ஸைபுலிசுலாமெனும் பத்திரிகையால்சமது
தேசத்திஞேர்க்கு என்றும்
தெளிவாக லௌகீகவைதீக விஷயங்கள்
தெரியும்விதமாய்ப்பயின்று

சரணத்தொடர்.

செப்பரியதியாகங்களை, இப்புவியில் செய்ததாலே
அப்துர்ரஹ்மான் தமிழ்க்குகந்தார்
உகந்தார் உகந்தார் (அஹ)

ஜனுப் யாகூப்ஹஸன் ஸேட் அவர்களின்பேரில்.

(அமாரநபீ—என்ற மெட்டு.)

பல்லவி.

யாகூப்ஹஸன் வெகுயோக்யர்கள் நேசன்

அநுபல்லவி.

யாகூப்ஹஸன் இன்பவாக்ய ஹஸன்
வெகுயோக்யர்கள் நேசன் (யாகூ)

சரணம்.

பார்க்குள் எங்கும்பிரசங்கம்
ஊக்கமாய்ச்செய்யுஞ்சிங்கம்
மார்க்கத்திற்குற்றபங்கம்
தீர்க்கத்தோன்றியதங்கம் (யாகூ)

தொஹையரா.

தஞ்சையில்நடந்தபெரு மாஹாணகான்பிரன்ஸின்
தலைமையை வஹித்து அன்று
சபையிஞேர்யாவர்க்கும் ஞானவாக்கியங்களை
சாற்றியது குற்றமென்று

சரணத்தொடர்.

தப்பிதமாய்நினைத்தே தண்டனையும் விதித்தார்
அப்துர்ரஹ்மானெத்தினத்திலும்
போற்றும்பக்தர் (யாகூ)

## பண்டாரவாடை ஜனுப் அப்துல் மஜீதுஸாஹிபு அவர்கள்பேரில்.

(சரசக்காரமாமா—என்ற மெட்டு).

பல்லவி.

அப்துல்மஜீதென்போர்
அறிவாளர்களுக்கு நண்பர்

அநுபல்லவி.

மிகஆவலாய் மதகாவலே
இறையேவற் கிசைந்து தாவிப்புரியும் (அப்)

தொஹையரா.

அயலார்கட்குபகாரம் செய்பவனே மனிதர்களிற்
சிறப்புளோனென்
றுயர்வான நபீயவர்கள் மொழிந்ததிருவாக்
கியத்தின்படி யென்னுளும்
சுயநன்மைநாடாது ஊரூராய்ச்சென்று
உபந்நியாசஞ்செய்திந்
தியநாட்டுக்குழைத்த இவர்க்கருள்புரிய
இறையிடங்கையேந்துவோமே

பல்லவியெடுப்பு.

யார்க்குமே உபகாரர் இவர்
மார்க்கமறிந்தவீரர்
இப்பதந்தனில் அப்துர்ரஹ்மான்
செப்பியதற்கு ஒப்பதாகிய (அப்துல்)

## தமிழ்நாடு பத்திராதிபர், ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் பேரில்.

(பார்க்கபலேஷோக்கானவள்—என்ற மெட்டு).

பல்லவி.

வாக்குச்சமர்த்தரானவர் வரதாராஜன்
வாக்குச்சமர்த்தரானவர்

அநுபல்லவி.

ஊக்கமிகுந்தசிங்கம் யார்க்குமுவந்ததங்கம்
ஊரெங்குமே பிரசாரம்புரிந்திடும்
வீரரிவரின் அபாரச்செயலினை
உண்மையுள்ளோர் கொண்டாடுறார்
பெருமனிதத்தன்மையில்லார் கண்டோடுறார் (வாக்கு)

காந்திமஹான் சிறையைச்சேர்ந்திடச் செய்முறையை
கண்டிப்பதற்கறிகுறியதாயெனைத்
தெண்டிப்பினும் வரிகொடுக்கேனெனவே
கம்பீரமாகச்சொன்னவர்
கடுஞ்சிறையின் துன்பம்சகிக்கும்மன்னவர் (வாக்கு)

தேசத்துக்காகச்சிறை வாசமுமிருமுறை
சென்று அநேகதுயரமனுபவித்
தின்றும்பிரியமுடனே அதேயிடஞ்
செல்ல அவாமிகுந்தவர்
அப்துர்ரஹ்மான்சொல்லும் தமிழ்க்குகந்தவர் (வாக்கு)

## கும்பகோணம் ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளை யவர்கள்பேரில்.

(சோமசேகரனருளும் பாலாவேலா—என்ற மெட்டு).

கண்ணிகள்.

தண்டபாணிபிள்ளைவாக்யம் நன்றாய்க்கேட்டால் கவர்ன்
மெண்டின்மீதுள்ள துர்ப்பயம் அன்றேஓட்டம் (த)

வண்டர்கட்கவர்பிரசங்கம் துன்பந்தரும் தேசத்
தொண்டர்கட்களவிலாத இன்பந்தரும் (த)

பயமிலாதெங்கும்பிரசங்கம் பண்ணும்சிங்கம் அந்
நியர்செயுந்துயரகற்ற எண்ணுந்தங்கம் (த)

சுயநலங்கருதிடாத சுத்தவீரன் இந்
தியர்சுகமடையவே உழைத்ததீரன் (த)

கள்ளைக்குடிப்பது பெருந்தோஷமென்றார் அந்தச்
சொல்லைச்சொன்னதாலே சிறைவாசஞ்சென்றார் (த)

நெல்வளஞ்சிறந்ததஞ்சை ஜில்லாவாசன் கவி
சொல்லியே அப்துர்ரஹ்மான் போற்றும்நேசன் (த)

முற்றிற்று.

# அறிவிப்பு.

ஓர் நற்செய்தி.

---

சகோதரர்களே,

மனிதர்களுக்குண்டாகும் அநேக வியாதிகளில் குஷ்டம், குன்மம், காசம், வாதம் என்கிற இந்நான்கு வியாதிகள்தான் மிகவுங்கொடியது. இவ்வியாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கும் சகோதரர்கள் படும் சொல்லொணாத் துயரத்தை விரிக்கிற்பெருகும். அதை இவ்விடம் விரிக்கவேண்டிய அவசியமுமில்லை, ஏனெனில் வியாதியாளர்கள் அதன் கஷ்டத்தையறிந்தேயிருப்பார்கள். மற்றவர்களுக்கு அதை விவரித்துக்கூறுவதிற்பிரயோஜனமில்லை. தற்போது வைத்திய சம்பந்தமான நோட்டீசுகள் எங்கும் மலிந்துகிடப்பதால் நோட்டீசுகளின்மீது சந்தேகம் உண்டாகிறது சகஜமே. ஆனால் நண்பர்கள் எல்லா நோட்டீசுகளும் உண்மையானதுமல்ல, எல்லா நோட்டீசுகளும் பொய்யானதுமல்ல என்ற ஒரு விஷயத்தை மட்டிலும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆதலால் மேற்கூறிய மூன்று வியாதிகளுக்கும் தகுந்த ஔஷதங்கள் நம்மிடம் தயாரிலிருக்கின்றன. இம்மருந்துகள் வி. பி. மூலமாக அனுப்பப்படமாட்டாது. நேரில்வந்தால் ஆண்டவனுதவியால் குஷ்டத்தை 40 நாளிலும், குன்மத்தையும் வாதத்தையும் 15 நாளிலும், காசத்தை 11 நாளிலும் சௌக்கியப்படுத்தமுடியும். வியாதி நீங்குவதற்குமுன் ஒரு பைசாவும் வாங்குவதில்லை. சொஸ்தமானபிறகு இன்னது கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்துகொண்டபிறகுதான் மருந்து கொடுக்கப்படும். ஆனால் நம்மிடம் வருபவர்கள் நமக்குக் கடிதம் எழுதி பதிலைப்பார்த்து வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதரவியாதிகளுள்ளவர்களும் வியாதியைக் குறிப்பிட்டு எழுதினால் அதற்கும் பதில் தெரிவிப்போம். இன்னும்வேண்டிய விஷயங்களை லெட்டர் மூலமாகவாவது நேரிலாவது தெரிந்துக்கொள்ளலாம்.

விலாசம்:—

அப்துர் ரஹ்மான் சாஹிபு,

பங்களாப்பள்ளி, ஐயம்பேட்டை,

தஞ்சாவூர் ஜில்லா.

# விளம்பரம்.

## அயச்செந்தூரம்.

நண்பர்களே,

வீரிய விர்த்திக்காக அநேக லேகியங்களையும் மாத்திரைகளையுந் தின்று சுகமடையாத பிரபுக்களும் ஏழைகளும் இந்த அற்புத குணம்வாய்ந்த அயச்செந்தூரத்தை காலை, மாலை இருவேளைகளில் இரண்டு அரிசியளவாக சுத்தமான தேனில் 40 நாள் சாப்பிட்டால் இந்திரியஸ்தானத்தில் வாய்வுமீறி ஆண் தன்மை யிழந்துபோதல், போகசக்தியில்லாமல் ஸ்திரீகளைக்கண்டவுடன் ஸ்கலிதமாகிவிடுதல், பித்தச்சூட்டினால் கண்களில் எரிச்சலுண்டாதல், நகக்கண்களில் இரத்த ஓட்டமில்லாதிருத்தல் இரத்தங்கெட்டு உடம்பு வெளுத்துப்போதல் பித்தவெட்டையினால் உதிரங்கெட்டு பலஹீனப்பட்டுப்போதல் பித்தச்சூட்டினால் கை, கால், உடம்புகளில் எரிச்சலுண்டாதல் உஷ்ணவாயுவினால் பசியில்லாமல் வயிறு மந்தமாக இருத்தல் காமாலையினால் முகமும் கண்களும் வெளுத்துப்போதல் விபரீதப்புணர்ச்சியினால் நாபியில் சூடுண்டாகி இந்திரியம் நீர்த்துப்போதல் முதலான துன்பங்களைத்துலைத்து இந்திரியவிளைவைப்பெருக்கி இரத்தத்தை விருத்தி செய்து நரம்புகளுக்கு வலிவுண்டாக்கி அளவிலாச்சந்தோஷத்தை உண்டுபண்ணும். சந்தேகமுள்ளவர்கள் நேரில்வந்து பரீக்ஷித்துப்பார்த்து வாங்கிக்கொள்ளலாம். சந்தேகம் நீங்கியவர்கள் ஆர்டர்செய்தால் வி. பி யில் அனுப்பப்படும். 40 நாள் சாப்பிடுவதற்குப் போதுமான ஒரு தோலா நிறையுள்ள செந்தூரம் விலை ரூ, 5-0-0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம் நம்மிடம் நேரில் வந்தால் மேகம் குன்மம், காசம், காக்கைவலிப்பு, வாதம் முதலிய கொடிய ரோகங்களையும் சௌக்கியப்படுத்தமுடியும். மற்றவைகளைக் கடிதமூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

ஹக்கீம் மீர்தாஹிர் ஹுசேன் சாஹிபு,

கோட்டை, சேலம்.

இப்புஸ்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.

சே. பு. முஹம்மது இஸ்மாயில் சாயபு,

மஜீத் தெருவு, சேந்தமங்கலம்,

நாமக்கல் தாலூகா, சேலம் ஜில்லா.